**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 8 /2017

PW-1 02-08-2024

| | |
|---|---|
| Name | குமரகுருபரன் |
| Father's/Husband's Name | அய்யாச்சாமி |
| Village | எட்டயபுரம் |
| Taluk | எட்டயபுரம் |
| Caste | – |
| Calling | கடை |
| Religion | – |
| Age | 48 |

(Accused absent. Petition filed and allowed)

**முதல்விசாரணை**

1) நான் எட்டயபுரத்தில் வசிக்கிறேன். நான் கடை வைத்துள்ளேன்.புகார்தாரரை தெரியும். இறந்துபோன வீரபுத்திரன் எனது தெருக்காரர். எதிரியை தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. கேள்விப்பட்டு வீரபுத்திரனை மருத்துவமனை சென்று பார்த்தேன்.

2) பின்பு மருத்துவமனையில் வைத்து 2 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி**
**வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 25.10.2016 தேதி இரவு சுமார் 8.35 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டியில் இருந்து எட்டயபுரம் நோக்கி சென்றுகொண்டிருந்தேன் என்றால் சரிதான். எனக்கு முன்னால் எதிரி அவரது இருசக்கர வாகனத்தில் இறந்துபோன வீரபுத்திரனை பின்னால் அமர வைத்து

சென்றுகொண்டிருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது.

2) 8.40 மணியளவில் எட்டயபுரம் பாரதியார் பாலிடெக்னிக் அருகே எதிரி அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாலும் வாகனத்தை ஓட்டியதால் இருவரும் நிலைய தடுமாறி கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இது சம்மந்தமாக வீரபுத்திரன் மகன் வாசுதேவனுக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவர் வந்தவுடன் காயம்பட்ட வீரபுத்திரனையும் முருகனையும் 108 ஆம்புலன்சில் எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் சரியல்ல.

3) மேல்சிகிச்சைக்காக வீரபுத்திரன் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.